செ.வெ.எண்-26 நாள்-23.11.2020

**அரியலூர் மாவட்டம்**

**நிவர் புயல் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் நேரில் ஆய்வு.**

வங்க கடலில் உருவாகியுள்ள **நிவர்** புயல் காரணமாக ஏற்படும் சேதங்களை தவிர்க்கும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஜெயங்கொண்டம் மற்றும் தா.பழூர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதன்படி, ஜெயங்கொண்டம் வட்டத்திற்குட்பட்ட குருவாலப்பர்கோவில் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புயல், மழையால் பாதிக்கப்படும் மக்களை தங்க வைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள தனியார் திருமண மண்டபத்தை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

மேலும், பொன்னேரியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புயல், மழைக்காரணங்களால் ஏரிக்கு அதிக அளவு நீர் நிரம்பும் பட்சத்தில், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் சகுக்கு குச்சிகள், மணல் மூட்டைகள் தேவையான அளவில் இருப்பு வைக்கவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். அதனைத்தொடர்ந்து, தா.பழூர் ஒன்றியத்திற்குட்பட்ட அணக்கரை உள்ளிட்ட கொள்ளிட கரையோர பகுதிகளில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளான தங்கும் வசதி, உணவு, கழிப்பறை, முதலுதவி உள்ளிட்டவைகளை ஏற்படுத்த தொடர்புடைய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**இந்தஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாவட்ட நிர்வாகத்தால் மழை மற்றும் வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்பட கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட 29 கிராமங்களில் வாழும் பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பான முறையில் தங்க வைக்கும் வகையில் அரசு பள்ளிக்கூடங்கள் மற்றும் சமுதாய கூடங்களில் அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மழை, வெள்ளகாலங்களில் நீர்நிலைகள் அனைத்தும் வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரால் முழுவதுமாக கண்கானிக்கப்பட்டு, பொதுமக்கள் மற்றும் விவசாய பகுதிகள் பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மழைகாலங்களில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் நெடுஞ்சாலை துறை மற்றும் உள்ளாட்சித்துறையினர் மூலம் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்படி ஏதேனும் பாலம் சேதமடைதல் மற்றும் சாலைகளில் மரங்கள் விழுதல் உள்ளிடவைகள் ஏற்படும் பொழுது அவற்றை சரி செய்யும் வகையில் தேவையான மணல் மூட்டைகள், மரம் அறுக்கும் கருவிகள் மற்றும் பணியாளர்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் மழை காலங்களில் மின்சாரத்தால் ஏற்படும் உயிரழிப்புகளை தடுக்கும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மின்சார வாரியத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைகாலங்களில் பொதுமக்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கும் வகையில் நியாயவிலைக்கடைகளில் தேவையான உணவு பொருட்களை இருப்பு வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பேரிடர் காலங்களில் மழை வெள்ளங்களிலிருந்து சிக்கிக்கொள்ளும் பொதுமக்களை மீட்பதற்கும், போக்குவரத்து இடையூறாக சாலைகளில் விழும் மரங்களை போர்கால அடிப்படையில் அப்புறப்படுத்துவதற்கும் தேவையான ரப்பர் படகு உள்ளிட்டவைகளை தயார்நிலையில் வைப்பதற்கு தீயணைப்புத்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, வங்கடகலில் உருவாகியுள்ள நிவர் புயல் காரணமாக அரியலூர் மாவட்டத்தில் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் பொருட்டு அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசு தெரிவிக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாக கையாண்டு புயல், மழை உள்ளிட்ட பேரிடர்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர் பூங்கோதை, உதவி செயற்பொறியாளர் சாந்தி, வட்டாட்சியர் கலைவாணன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**